**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.200/2004**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 04.08.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : இளையப்பன் Father's Name : ராமசாமி

துவக்க நேரம்: 03.42 P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**9, 10** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. துலுக்கனூர் கிராம புல எண். 195-ன் மொத்த விஸ்தீரணம் 7 ஏக்.60 செண்ட் என்றால் சரிதான். அதில் வடபுறம் உள்ள 2 ஏக்கர் எனது தாத்தா இளையப்ப கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அவரது ஆயுள் காலம் வரை அவர் அனுபவிக்க வேண்டுமெனவும், அவருக்கு பின்னிட்டு வாரிசுகளுக்கு சேரவேண்டியது எனவும் பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு எந்த வாசகமும் பாகப்பிரிவினைப்பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

2. மேற்சொன்ன 2 ஏக்கருக்கு தென்புறமுள்ள நிலமான 2 ஏக்கர் 60 செண்ட் நிலம் எனது தந்தை ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு தென்புறம் உள்ள 3 ஏக்கர் நிலமானது எனது தந்தையின்

உடன்பிறந்த கைலப்ப கவுண்டர்(1-ம் பிரதிவாதி) என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. நான் இந்த தாவாவிற்கு முன்பு தாவா சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 2-ம் அயிட்ட சொத்தின் வடபுறமுள்ள நிலமானது எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகம் என்றால் சரிதான். தாவா 2-ம் அயிட்ட சொத்தின் தென்புறமுள்ள நிலமானது கைலப்ப கவுண்டருக்கு(1-ம் பிரதிவாதி) ஒதுக்கப்பட்ட பாகம் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.4 ஆவணமான எனது பாகக்கறார் பத்திரத்தில் சொத்து விவரத்தில் நடேசன் நிலத்திற்கு தெற்கு என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் மேற்படி ஆவணத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட பாகமானது நடேசன் நிலத்திற்கு வடக்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் வடக்கு பகுதியில் நடேசன் நிலம் என்பது முத்துக்கவுண்டர் மகன் நடேசன் நிலமும், அதேபோல் தெற்கில் கைலாப்ப கவுண்டர் மகன் நடேசன் நிலம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4-ன்படி தாவா சொத்தின் வடக்கில் முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட நிலம் இல்லை என்றாலும் சரியல்ல.

5. நான் இந்த தாவாவை தாக்கல் செய்யும்பொழுது தாவா சொத்திற்குண்டான உட்பிரிவுகளை குறிப்பிட்டுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 2-வது அயிட்ட சொத்திற்கு புல எண். 195/1A2-ல் விஸ்தீரணம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக அதனை திருத்தம் செய்ய நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் வருவாய் அலுவலகத்தில் எந்த மனுவும் கொடுக்கவில்லை, அதற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 200/2004-ல் ஆக்கிரமிப்பு

செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள பகுதியின் நீளம், அகலம், விஸ்தீரணம் மற்றும் ஆக்கிரமிப்பு தேதி ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 30 செண்டிற்கு குறைவாக நிலம் உள்ளதாக குறிப்பிட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு எண். 200/2004-ல் ஆக்கிரமிப்பு இருப்பதாக கூட குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

7. இந்த தாவாவில் எந்தவித வழக்கு மூலமும் இல்லை என்றாலும், தாவா சொத்தை எனது தகப்பனார் 1-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது தெரிந்தே, அந்த உண்மையை மறைத்து தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. அதேபோல் அசல் வழக்கு 200/2004-ல் வழக்கு மூலம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும், தாவாவிற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் தரப்பில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அவர்கள் அனுபவ சுவாதீனத்தில் தொடர்ச்சியாக இருந்து வருவதாலும், அந்த தாவாவிலும் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல, தாவா சொத்துக்கள் இதுநாள்வரை கூட்டுப்பட்டாவாகத்தான் இருந்து வருகிறது. நான் தாக்கல் செய்துள்ள 2 தாவாக்களும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 04.37 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.200/2004, Dt.04.08.2025